

சென்னை, தலைமைச் செயலகத்தில் நேற்று முன்தினம் (27.11.2023) நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசுவை, சீன நாட்டின் ஹாங்சோவில் நடைபெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டிகள் 2023ல் பெண்கள் பிரிவில் 4x400 மீட்டர் தொடர் ஓட்டப்பந்தயம், 4x400 மீட்டர் கலப்பு தொடர் ஓட்டப்பந்தயத்தில் வெள்ளிப் பதக்கங்கள் வென்ற செல்வி சுபா வெங்கடேசன் மற்றும் பெண்கள் ஸ்குவாஷ் போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்ற செல்வி ஜோஸ்னா சின்னப்பா ஆகிய மின்சார வாரிய அலுவலர்கள் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். உடன் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழக முதுநிலை விளையாட்டு அலுவலர் சிவகுமார் உள்ளார்.



சென்னை, கோட்டூர்புரம், அண்ணா நூற்றாண்டு நூலக கூட்டரங்கில் நேற்று முன்தினம் (27.11.2023) பொது நூலகத்துறை, சென்னை மாநகர நூலக ஆணைக்குழு மற்றும் சமூக நீதிக் கண்காணிப்புக் குழு சார்பில் நடைபெற்ற கலைஞர் நூற்றாண்டு விழாவில் சென்னை மாநகர நூலக ஆணைக் குழு தலைவர் கவிஞர் மனுஷ்ய புத்திரன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் பொது நூலகத் துறை இயக்குநர் க. இளம்பகவத், சமூக நீதிக் கண்காணிப்புக் குழு உறுப்பினர் செயலர் த.ஆபிரகாம், எழுத்தாளர் எஸ்.ராமகிருஷ்ணன், கவிஞர் யுகபாரதி, சமூக நீதிக் கண்காணிப்புக் குழு உறுப்பினர் ஜெய்சன், பொது நூலகத் துறை துணை இயக்குநர் ச.இளங்கோ சந்திரகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# தமிழ்நாட்டில் மிகவும் நல்ல மருத்துவக் கட்டமைப்பு உள்ளது!

## தமிழ்நாடு அரசுக்கு உச்சநீதிமன்றம் பாராட்டு!

புதுடெல்லி, நவ.29-

கடந்த 2019ம் ஆண்டு மக்களவைத் தேர்தல் நெருங்கிய நேரத்தில், மதுரை தோப்பூரில் எய்ம்ஸ் மருத்துவமனை கட்ட பிரதமர் மோடியால் அடிக்கல் நாட்டப்பட்டது. ஆனால் ஐந்து ஆண்டுகளாகியும் எய்ம்ஸ் மருத்துவமனைக் கட்ட ஒன்றிய அரசு நடவடிக்கை எடுக்கவில்லை.

இந்த நிலையில், மதுரை எய்ம்ஸ் மருத்துவமனை கட்டுமானப் பணியை விரைவில் தொடங்க உத்தரவிடக் கோரி உச்சநீதி மன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது.



இவ்வழக்கு நீதிபதிகள் சஞ்சய் கிஷன் கவுல், சுதான்சு துலியா அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது, வழக்கறிஞர் ஜெயசுகின் ஆஜராகி, 9 மாநிலங்களில் எய்ம்ஸ் மருத்துவமனை தொடங்கப்பட்டு விட்டதாகவும், தமிழ்நாட்டில் மட்டும் தொடங்கப்படவில்லை என்றும் வாதிட்டார்.

அப்போது குறுக்கிட்ட நீதிபதிகள், பல மாநிலங்களில் இது போன்ற பிரச்சினைகள் நிலவுகிறது என்றும், அடிக்கல் நாட்டிவிட்டு கட்டுமானப் பணிகளை தொடங்குவதில்லை என்றும் அதிருப்தி தெரிவித்தனர்.

மேலும், தமிழ்நாட்டில் மிகவும் நல்ல மருத்துவக் கட்டமைப்பு உள்ளதாக தமிழ்நாடு அரசுக்குப் பாராட்டு தெரிவித்தனர்.

இந்த விவகாரத்தில் நீதிமன்றம் தலையிட முடியாது என கூறிய நீதிபதிகள், நிர்வாக ரீதியாக அரசை அணுகும்படி மனுதாரருக்கு அறிவுறுத்தி வழக்கை முடித்து வைத்தனர்.

## அமைச்சர்கள் எஸ்.ரகுபதி - சிவ.வீ.மெய்யநாதன் தலைமை!

# மாவட்டப் பிரதிநிதி கேவிஎஸ்.ஏ.மோகன் - பச்சையம்மாள் இல்ல திருமண விழா!

## பெரியண்ணன் அரசு, எம்.எம்.அப்துல்லா, வை.முத்துராஜா, கேபிகேடி.தங்கமணி, ரெ.தங்கம் பங்கேற்பு!

புதுக்கோட்டை, நவ.29-

புதுக்கோட்டை தெற்கு மாவட்டம், திருவரங்குளம் மேற்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட அரசடிப்பட்டி, தவளப்பள்ளம் கிராமத்தில் மாவட்டப் பிரதிநிதி கேவிஎஸ்.ஏ.மோகன்-பச்சையம்மாள் ஆகியோர் மகன் எம்.மகேஷ்வரனுக்கும் தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை தாலுகா, கொண்டிகுளம் ரா.ராஜேந்திரன் - செல்லம்மாள் என்ற மாலா ஆகியோர் மகள் ஆர்.ராதிகாவுக்கும், அரசடிப்பட்டி மணமகன் இல்லத்தில் திருமணம் இன்று (29.11.2023 புதன் கிழமை) காலை 10.30 மணி முதல் 11.30 மணிக்குள், புதுக்கோட்டை தெற்கு மாவட்டக் கழக செயலாளர், சட்டத்துறை அமைச்சர் எஸ்.இரகுபதி, சுற்று சூழல், காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் தலைமையில் நடைபெறுகிறது.



முன்னாள் மாவட்டச் செயலாளர் பெரியண்ணன் அரசு, எம்.எம்.அப்துல்லா எம்.பி., டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ., சிவகங்கை மாவட்ட துணைச் செயலாளர் ஜோன்ஸ் ரூசோ, தொழிலதிபர்கள் எஸ். ராமச்சந்திரன்,எஸ்.ஏ. சையது இப்ராஹிம், சொத்து பாதுகாப்புக் குழு உறுப்பினர் த.சந்திரசேகரன், மாநில இலக்கிய அணி துணைத் தலைவர் கவிச்சுடர் கவிதைப் பித்தன், தமிழ்நாடு அரசு நலவாரிய உறுப்பினர் ரெ.தங்கம், திருவரங்குளம் தெற்கு ஒன்றிய செயலாளர் அரு. வடிவேலு, மாவட்ட துணை செயலாளர் ஞான.இளங்கோவன், ஒன்றிய பெருந்தலைவர் கேபிகே.டி.வள்ளியம்மை தங்கமணி, நகர்மன்ற தலைவர் திலகவதி செந்தில், திருவரங்குளம் கிழக்கு ஒன்றிய செயலாளர் கே.எஸ்.ரவி, மணமேல்குடி ஒன்றியச் செயலாளர் சக்தி.ராமசாமி, அறந்தாங்கி கிழக்கு ஒன்றிய செயலாளர் எல்.குமார், பேரூராட்சி மன்ற தலைவர் கே.சி.சிவக்குமார், ஆலங்குடி பேரூர் செயலாளர் ஏ.பழனி குமார்,ஊராட்சி மன்ற தலைவர் ஆர்.நாராயணன், பேரூராட்சி தலைவர் ராசி முருகானந்தம், முகமை "இணை தாளம்" என்.ஜெயராமன், தமிழ்நாடு அரசு நலவாரிய உறுப்பினர் சகாய சங்கீதா, தலைமை ஆசிரியர் ஆரோக்கிய மேரி, அருட்சகோதரி ஏ.அடைக்கலமேரி ஆகியோர் பங்கேற்று மணமக்களை வாழ்த்துகின்றனர்.

திருவரங்குளம் மேற்கு ஒன்றிய செயலாளர் கே.பி.கே.டி.தங்கமணி வரவேற்று பேசுகிறார்.

மேலும், நிர்வாகிகளான ஸ்ரீதேவி அண்ணாதுரை, க.சத்தியமூர்த்தி, கேபிகே. பனையப்பன், செ.அசோக் பாண்டியன், ராஜு ரஞ்சன் பிரதர்ஸ், ஆர்.ரெத்தினவேல், த.மணிராஜன், தமிழ்ச்செல்வி முருகேசன், க.நைனா முகமது, சிவ.பால.இளங்கோ, எம்ஜி என்ற ராமச்சந்திரன், மு.கருணாகரன், பொன். லோகநாதன், சர்வேயர் எம். நடேசன், வழக்கறிஞர் டி. வளர்மதி, கே.பி.கே.டி.தேவ சூர்யா, ஆர்.வைத்திலிங்கம், எம்.எம்.பாலு, ஆசிரியர் எம். ரமேஷ், அரசு கூடுதல் வழக்கறிஞர் கன்ரா கணேஷ், அரசு கூடுதல் வழக்கறிஞர் த.பழனியப்பன், எஸ்எம்.குமரேசன், டாக்டர் ஆர்.கண்ணதாசன், அரசு கூடுதல் வழக்கறிஞர் த.கண்ணதாசன்,

டி.ஜான்பிரிட்டோ, உமா சண்முக சுந்தரம், க.செல்லத்துரை, சி.சிவசங்கர், கேஎம். சுப்பிரமணியன், பெரி.பன்னீர்செல்வம், சுமதிமெய்யநாதன், கேவி.சுப்பையா, எஸ்.செல்வம், க.தெட்சிணாமூர்த்தி, ஆர்.மகிமைநாதன், ஆர்.எம்.ஏ. அயூப்கான், உஷா செல்வம், ஏ.அருளானந்து, ஆர்.நாராயணசாமி, ஐ.லூர்து நாதன், நேஷனல் என்.அப்துல்லா, ஏஎஸ்ஆர்.இப்றாஹிம், எஸ்பி.முத்துராமன், கே.வீரப்பன், வீர.மெய்யர், எஸ்விடி.செங்கோல், எல். கணேசன், எம்எஸ்கே.சின்னராஜா, என்.சங்கர், கே.சந்திரசேகர், டி.பாபுஜான், ஒய். அருண்ஜார்ஜ், இராம.தமிழரசன் ஆகியோர் பங்கேற்று வாழ்த்துரை வழங்குகின்றனர்.

தலைமைப் பொதுக்குழு உறுப்பினர் ஆர்.வி.செல்வம் நன்றி தெரிவித்து பேசுகிறார்.

வரவேற்பு குழு: ஆர்.எஸ். ராஜ சரவணன், ஏ.கே.செல்வம், ஏ.முகமது ரபீக், ராஜ சரவணன், கே.பழனியப்பன், கேவி.சண்முகசுந்தரம், எல்பிஎப்.கே.பரமசிவம், வீர. பாலாஜி, ஆர்.பாலமுருகன், கே.பிரசாத் மற்றும் மாவட்டக் கழக நிர்வாகிகளும், ஒன்றிய கழக, பேரூர் கழக மற்றும் கிளைக் கழக நிர்வாகிகளும், கழக அனைத்து சார்பு அணி நிர்வாகிகளும், கழக முன்னோடிகளும், குழந்தை விநாயகர்கோட்டை ஊராட்சி பொதுமக்களும், நண்பர்களும் பங்கேற்று மணமக்களை வாழ்த்துகின்றனர்.


